இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் - 6
தொடர் மதிப்பிட்டுப் பரீட்சை I
தொழிற்சட்டம் – LWU 4323/3323
காலம் : 01 மணித்தியாலம்

---

திகதி: 07.03.2013 நேரம் : பி.ப 02.30 – பி.ப 03.30 வரை

---

கீழே தரப்பட்ட வினாவுக்கு விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

நீலா என்பவள் 2008 நவம்பர் மாதத்திலிருந்து 'ஜஸ்ரிஸ்' என அழைக்கப்படும் வாராந்த சஞ்சிகையைப் பிரசுரிக்கும் புதினப் பத்திரிகைக் கம்பனியொன்றில் செய்தியாளரொருவராக ஈடுபடுத்தப்பட்டாள். அவள் கம்பனியுடன் உடன்படிக்கையொன்றை 2008 நவம்பரில் கைச்சாத்திட்டாள். கம்பனிக்கும் நீலாவிற்கும் இடையிலான அந்த உடன்படிக்கையானது கம்பனிக்கான அவளுடைய வேலையைப் பாதிக்காதவாறு அவள் வேறு இடத்தில் வேலை செய்யலாமென ஏற்பாடு செய்தது. அந்த உடன்படிக்கையானது சேவை ஒப்பந்தமொன்றாக அதனைக் கருதமுடியாதெனவும் மேலும் தெரிவித்தது. மேல் மாகாணத்திலான குற்றச் செயல்கள் பற்றிய செய்தியை தினமும் வழங்குவது அவளுடைய பொறுப்பாக இருந்தது. அக் காலப்பகுதியில் அவள் வழங்கிய செய்திகளின் அடிப்படையில் இரண்டு வாரங்களுக்கொரு தடவை நீலாவிற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டது. அலுவலகத்திற்கு ஒவ்வொரு நாளும் வருகை தருமாறு அவர் எதிர்பார்க்கப்படவில்லை, ஆனால் குற்றச் செயல்களைப் பற்றிய செய்திகளை ஒவ்வொரு நாளும் வழங்குவது அவளுக்கு கட்டாயமானதாக இருந்தது. அவளுக்கு லீவு அல்லது வேறு எந்த கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. கம்பனிக்கும் நீலாவிற்கும் இடையேயான உடன்படிக்கையின் படி அவள் தனது கடமைகளைச் செய்ய முடியாத நாட்களில் பதிலாளொருவரை அவள் அனுப்ப வேண்டியிருந்தது. பதிலாளொருவரை ஈடுபடுத்த கம்பனியிடமிருந்து முன்னைய அனுமதியை அவள் பெற வேண்டியிருந்தது. அவளுடைய தாயாரின் திடீர் இறப்பின் காரணமாக செய்திகளை வழங்குவதற்குப் பதிலாளொருவரை நியமிக்காது நீலா அவுஸ்திரேலியவிற்குச் சென்றாள். ஒரு மாதத்திற்குப் பின்னர் அவள் திரும்பிய போது கம்பனிக்கு அறிவிக்காதும் குற்றச் செயல்கள் பற்றிய செய்திகளை வழங்குவதற்கு வேறு எவரையும் பதிலாக நியமிக்காதும் நாட்டை விட்டுச் சென்றமைக்காக கம்பனியுடனான அவளுடைய உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கும் கடிதமொன்றை அவள் பெற்றாள்.

நீலா தொழில் நியாய சபையொன்றில் விண்ணப்பமொன்றைச் செய்ய விரும்புவதுடன் தான் சேவை ஒப்பந்தமொன்றின் கீழ் புதினப் பத்திரிகைக் கம்பனியின் வேலையாளொருவராக இருந்தாளா அல்லது அவ்வாறில்லையா என அறிய விரும்புகின்றாள்.

பொருத்தமான வழக்குகளை ஆதாரங்காட்டி அவளுக்கு ஆலோசனை வழங்குக.